**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 50/2024</u>**

பெயர் : சாந்தி P.W.1.

க/பெ. : சம்பந்தம்

தேதி : 07.04.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை :</u> –**

**1.** நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்ணை மாற்றக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை நான் யாரிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால் சாமிநாதன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் மேற்படி சாமிநாதனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2. சர்வே எண் தவறாக உள்ள விபரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 1 வருடத்திற்கு முன்னர் தெரிய வந்தது. சர்வே எண் தவறாக உள்ள விபரம் தெரிய வந்த பிறகு நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று கேட்டேன். பின்னர் எனக்கு கிரயம் செய்து கொடுத்த சாமிநாதன் என்பவரிடம் திருத்த பத்திரம் எழுதித்தர கோரி கேட்டேன். அவர் எழுதி தருவதாக கூறினார். ஆனால், இன்றைய தேதி வரை அவர் எனக்கு திருத்த பத்திரம் எழுதித்தரவில்லை.

3. மேற்படி சாமிநாதனுக்கு திருத்தபத்திரம் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எனது வழக்குரையிலேயே வருவாய் துறை ஆவணங்களில் பிழை ஏற்பட்டுள்ளதாக நான் குறிப்பிட்டுள்ளதால் எனக்கு கிரய பத்திரம் செய்து கொடுத்த சாமிநாதன் என்பவரின் முதல்வர் ஜெயலெட்சுமியின் தவறு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. திருத்தபத்திரம் எழுதித்தர கோரி நான் தரங்கம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தை அணுகியபோது அவர்கள் மீண்டும் பதிவு கட்டணம் செலுத்தி ஆவணத்தை பதிவு செய்ய வேண்டும் என்று கூறினார் என்றாலும் அதிக தொகை செலவாகும் என்பதால் நான் நீதிமன்றத்தை அணுகியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

4.சாமிநாதன் கிரயம் செய்து கொடுத்தவர்களில் நான்கு நபர்கள் திருத்த பத்திரம் எழுதி பதிவு செய்துகொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் முகவர் எனக்கு திருத்த பத்திரம் எழுதி தர தயாராக தான் இருந்தார் என்றாலும் நான் தான் திருத்த பத்திரம் எழுதிக்கொள்ள தயாராகஇல்லை என்றாலும்

சரியல்ல. பிழைத்திருத்தம் பத்திரம் எழுதிதருவதாக சாமிநாதன் என்பவர் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் என்னை அழைத்தார் என்றால் சரியல்ல. பொய்யான காரணங்களை கூறி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடிக்கு உரியது என்றாலும் சரியல்ல.